சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

செய்திமடல் - 27 | 24-11-2011



# 17-11-2011 அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு

தலைப்பு : சமஸ்கிருதமயமாக்கம்

தொடக்கவுரையாடல் : ச. சத்தியதேவன்

மனித சமூகங்களின் பண்பாடுகளில் தொடர்ச்சியான மாற்றங்கள் நிகழ்கின்றன.

கற்றுணர்ந்த நடத்தை முறையின் (Learned Behavior) தொகுப்பாகப் பண்பாடு நிகழ்கின்றது. அதனால் மக்கள் புதியனவற்றைக் கற்றுக்கொள்ளும்போதெல்லாம் அவர்கள் பண்பாட்டில் மாற்றம் நிகழ்கிறது.

இந்த மாற்றம் அனைத்துப் பண்பாடுகளிலும் நிகழ்கிறது. இந்த வகையில் மாற்றத்துக்கு உட்படும் ஒவ்வொரு பண்பாடும் அது தொடர்புகொள்ளும் அயற்பண்பாட்டுக் கூறுகளைத் தேவைக்கேற்ப மாற்றம் செய்தோ செய்யாமலோ ஏற்றுக்கொள்கிறது.

ஓரினமாதல் (Assimilation), நவீனமயமாதல் (Modernization), தொழில்மயமாதல் (Industrialization), நகரமயமாதல் (Urbanization), புரட்சி (Revolution) போன்றவை பண்பாட்டு மாற்றத்தை நிகழ்த்துகின்ற முதன்மைக்காரணிகளாக இருக்கின்றன என மேற்கின் சமூகவியலாளர்கள் வரையறுத்துள்ளனர்.

மேற்கின் சமூக அமைப்பிலிருந்து மாறுபட்ட, சிக்கலான சாதியமைப்புச்சமூகங்களான இந்தியச்சமூகங்களில் நிகழ்கின்ற பண்பாட்டு மாற்றங்களுக்கான விசேடமான காரணிகளை இந்தியச் சமூகவியலாளர்கள் முன்வைத்துள்ளனர். அவையாவன, மேற்குமயமாதல், சமஸ்கிருதமயமாக்கம், இந்துமயமாதல், பிற சமயங்களுக்கு மாறுதல்.

## சமஸ்கிருதமயமாக்கம்

M. N. சிறிநிவாஸ் என்ற இந்தியச்சமூகவியலாளர் இந்தியச்சமூகங்களில் நடைபெறும் அசைவியக்கத்தைக்குறிக்க இந்த எண்ணக்கருவை முன்வைத்தார். இந்திய அரசில் பல பதவிகளை வகித்து, இந்திய அரசின் அங்கீகாரம் பெற்ற அவர் 1952இல் "தென்னிந்தியக் குடகு மக்களின் சமயமும் சமுதாயமும்" என்ற தனது ஆய்வில் இதை ஓர் எண்ணக்கருவாக முன்வைத்து பின்னர் அதனை ஒரு கோட்பாடு என்ற நிலைக்கு உயர்த்தினார்.

சாதியும் சாதி அடுக்குமுறையும் மிகவும் உறைந்துவிட்ட, மாற்றமடையாத அமைப்புக்கள் அல்ல. அவை தொடர்ச்சியான நெகிழ்வுத்தன்மைக்கு உட்பட்டே இயங்கி வருகின்றன. இதன் ஒரு பகுதியாகக் கீழ்நிலைச்சாதிகள் தகுதிப்பெயர்வின் மூலம் மேல் நோக்கி நகர்ந்து தங்களின் தகுதியை உயர்த்திக்கொள்கின்றன.

இத்தகுதிப்பெயர்வில் பிராமணர்களுக்குக் கீழுள்ள சாதிகள் பிராமணர்களின் வாழ்க்கை முறையைப் பின்பற்றித் தங்களின் சமுதாயத் தகுதியை உயர்த்திக்கொள்ள முயல்கின்றன. இத்தகுதிப்பெயர்வில் புலால் உண்ணாமை, மது அருந்தாமை, ஆசாரம் மிக்க பிராமணர்களின் வைதிகச்சடங்குமுறைகள். ஆகியவற்றை ஏற்றுக்கொள்ளுதல் போன்றவை இன்றியமையாதனவாக உள்ளன.

பிராமணர்களின் வாழ்க்கை முறையைப் பின்பற்றுவதே உயர்குடியாக்கம் என்று கருதி அதற்கு பிராமணிய மயமாக்கம் என்று பெயரிட்ட அவர், பின்பு தனியே பிராமணர்களின் வாழ்க்கை முறையை விட ஒவ்வொரு சாதியும் தனக்கு மேலே உள்ள சாதி வழக்கங்களைப் பின்பற்றித் தகுதிப்பெயர்வில் ஈடுபடுவதைக்கண்டு அதனைச் "சமஸ்கிருதமயமாக்கல்" என்று கோட்பாடாக்கினார்.

பல்வேறு சூழ்நிலைகள் காரணமாக ஒவ்வொரு வர்ணமும் தனக்கு மேலுள்ள வர்ணத்தை நோக்கி தகுதிப்பெயர்வுறுகின்றன என அவர் விளக்கினார்.


சிறிநிவாசின் கோட்பாட்டில் கவனிக்கப்படவேண்டிய இரண்டு விடயங்கள் உண்டு. .

மிகுதி அடுத்தபக்கம்

## அடுத்து வரும் தலைப்புக்கள்

சோதிடம் : ஒரு விமர்சனப்பார்வை
24-11-2011 | மௌ. மதுவர்மன்

யாப்பிலக்கணமும் செய்யுளும்
01-12-2011 | ஜின்னா ஷரிபுதீன்



பிரெடரிக் எங்கெல்சு (ஃபிரெடரிக் எங்கெல்ஸ்; Friedrich Engels; நவம்பர் 28, 1820 - ஆகஸ்டு 5, 1895) 19ம் நூற்றாண்டைச்சேர்ந்த ஜேர்மன் அரசியல் மெய்யியலாளராவார். இவர் கார்ல் மார்க்ஸ் உடன் இணைந்து கம்யூனிச சித்தாந்தத்தை உருவாக்கியதுடன், கம்யூனிச கட்சி அறிக்கையை மார்க்ஸுடன் சேர்ந்து எழுதினார். கார்ல் மார்க்ஸின் இறப்புக்கு பின் மூலதனம் நூலின் பல தொகுதிகளை தொகுத்தார்.

"மாற்றம் ஒன்றே மாறாதது" - எங்கெல்ஸ்

## சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை
0772307807
0772260165

Facebook group :
facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் :
circle.thulaa.net

## சமஸ்கிருதமயமாதல் - முன்பக்கத்தொடர்ச்சி

(1) ஆதிகத்தில் பிராமணரல்லாத சாதிகள் இருக்கும்போது, பிராமணர்கள்கூட அவர்களின் சமூக பொருளாதாரக் கூறுகளைப் பின்பற்றும் போக்குக் காணப்பட்டாலும் பிராமணர்கள் தங்களது சடங்குத் தூய்மையையும் அதன் வழி அமையும் புனிதம் சார்ந்த தகுதியையும் விட்டுக்கொடுக்க மாட்டார்கள்.

(2) படிநிலையில் கிழ்ச்சாதிகள் சமஸ்கிருதமயமாதலைக் கடந்து வராமல் மேற்கத்தையமயமாதலுக்கு உட்படமாட்டார்கள்.

சமஸ்கிருதமயமாக்கம் என்ற சொல், பொருள் மயக்கத்தை ஏற்படுத்துவதாக உணரப்படுகிறது. "மேல்நிலையாக்கம்" என்ற சொல் தமிழில் இச்செயன்முறையைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. சமஸ்கிருதமயமாக்கம் என்ற சொல்லின் போதாமைகளை சிறிநிவாஸ் உணர்ந்திருந்தார். ஆயினும் தொடர்ச்சியாக அச்சொல்லையே பயன்படுத்திவந்தார்.

**சமஸ்கிருதமயமாதல் கோட்பாட்டிற்கான மறுப்பு**

யோகிந்திர சிங் சமஸ்கிருதமயமாக்கம் என்ற கோட்பாட்டினைக் கடுமையாக மறுத்தவர். அவர் பின்வரும் கேள்விகளை அக்கோட்பாட்டின் மீது தொடுத்தார்

(1) கீழ்ச்சாதிகள் தகுதி பெயர்ந்து மேல்நிலைக்குச் சென்றுவிட்டார்களா?

(2) அப்படியானால் கீழ்நிலைச்சாதிகளே இன்று இல்லையா?

(3) தகுதி மாறிய சாதிகள் சமுதாயத்தில் என்ன பெயருடன் விளங்கிகிறார்கள்?

(4) தகுதி பெயர்ந்தவர்களை மேற்சாதியினர் அங்கீகரித்தார்களா?

இக்கேள்விகளுக்கான விடை சிறிநிவாசனுக்கு எதிரானதாகவே இருக்கும் என அவர் குறிப்பிட்டார்.

## சோதிடம் : ஒரு விமர்சனப்பார்வை

(இந்த வாரம் இடம்பெறவுள்ள உரையாடலுக்கான முன்வரைவு.
(மௌ. மதுவர்மன்)

1. கோள்களை அடிப்படையாகக் கொண்ட சோதிட முறை - அறிமுகம்

2. சோதிடமுறையின் தோற்றமும், மேலைத்தேச, கீழைத்தேச வேறுபாடுகள்

3. இன்றும் பெருமளவானவர்கள் ஏன் சோதிடத்தை நம்புகின்றார்கள்? (புள்ளிவிபரவியல், உளவியல் அடிப்படையான காரணங்கள்) (Correlation, Causation, Barnum Effect, Forer Effect, Hits & Misses)

4. சோதிடர்கள், சோதிடமுறைகள் பற்றி உலக மதங்கள் என்ன சொல்கின்றன?

5. திருமணங்களில் சாதகம், சோதிடத்தின் தாக்கம்.

6. சோதிடகாரர்களில் பலர் கூறுவது போல, சோதிடம் என்பது விஞ்ஞான ரீதியில் நம்பகமானதா? அதன் அடிப்படைகள் மீதான் அறிவியற் கேள்விகளும், விளக்கங்களும். (Falsifiability, Physics)

7. புதிய கிரகங்கள், நட்சத்திரங்களின் கண்டுபிடிப்புக்கள் தொடர்பாக சோதிடம்.

8. புவியச்சில் காலத்தோடு ஏற்படும் மாற்றம்.
9. நான்கு அடிப்படை பௌதீக விசைகள்.
10. இரணைப் பிள்ளைளும் சோதிடமும்

11. சோதிட முறைகள் மீதான விஞ்ஞான ஆராய்ச்சிகளும், முடிவுகளும்

## நான் ஒரு வழிபோக்கன்

பல மேகங்களை
தாண்டி
தரையில்
பயணிப்பவன்

மேகங்களையே பார்த்தபடி
தரையில் பயணிப்பவன்

மேகங்கள் எப்போதும்
புதுமையாகவும்,
அழகாகவும் இருப்பதாலும்,
என்னக்கு பிடித்து இருப்பதாலும்
அவற்றைப் பார்த்தபடி
தரையில் பயணிப்பவன்

ஒவ்வொரு மேகமும்
ஒவ்வொரு மாதிரி.
சில ரொம்பவே அழகாயிருக்கும்
சில ரொம்பவே வித்தியாசமாக இருக்கும்
பல, பல நேரங்களில் புரிவதும் இல்லை

ஆனாலும் நான்
மேகங்களை
பார்ப்பவன்.
ரசிப்பவன்

அவற்றைப் பார்த்தபடி
பயணிப்பவன்

மேகங்களும் என்னைப் போலவே
அவையும் தொடர்ந்து
பயணிப்பவைதான்

ஆனால்
என்னை அவை பார்ப்பதும் இல்லை
என்னுடன் சேர்ந்து பயணிப்பதும் இல்லை.

என் பயணங்களில்
என்னுடனே வரும்
அந்த வானத்தை

நான் பார்ப்பதில்லை,
அதுவும் என்னை பார்த்ததில்லை

ஆனால்
இன்றுதான் உணர்ந்தேன்

என்பயணம் முழுவதிலும்

அது என்னுடன்தான் இருந்தது என்று

**தி. அனோஜன்**



சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.